மாகாணக்கல்வித் திணைக்கம் - வடக்கு மாகாணம்

இரண்டாம் தவணைப் பரீட்சை - 2023

**தமிழ்மொழியும் இலக்கியமும் -III**

**தரம்** : 10 **நேரம்** : 2 மணித்தியாலம்

- ❖ **ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**
- ❖ 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆம் வினாக்களில் ஏதாவது ஒரு வினாவுக்கும் விடை தருக.

01) **சுருக்கமான விடை தருக.**

1. கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கு அறுக்கும்
மூத்தோரை இல்லா அவைக்களனும்...........

அ. பிணக்கு அறுத்தல் என்றால் என்ன?

ஆ. அவைக்களன் என்பது யாது?

2. தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணியதே யாயினும் .....................

அ. ‘‘தெண்ணீர்’’ என்பதன் பொருள் யாது?

ஆ ‘‘சிறுமீன் சினை’’ என்பது யாது?,

3. ‘‘பிரசண்ட மாருதத்திற்குப் பிறகு என்று சொல்லுகின்ற பிறகு அந்தச் சபையில் நிலவியது’’

அ. பிரசண்ட மாருதம் என்றால் என்ன?

ஆ. அந்தச் சபை என்று சொல்லப்படும் சபைக்கு பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை வைத்த பெயர் யாது?

4. ‘‘தாழுமுள்ளத்தர் சோர்வினர் ஆடு போல் தாவித் தாவிப்
பலபொருள் நாடுவோர்’’

அ. இங்கு ஆட்டின் செய்கை யாருக்கு உவமிக்கப்பட்டுள்ளது.

ஆ. முயற்சியற்றவர்களின் இயல்புகள் இரண்டினைத் தருக.

5. ‘‘கொங்கர்க் கமராபதியளித்த
கோவே யிராச குலதிலகா’’
அ. அமராபதி என்பதன் கருத்து யாது?
ஆ. இராசகுல திலகா எனப்பட்டவன் யார்?

6. ‘‘வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்’’

அ. வானரங்கள், வான்கவிகள் என்பவற்றின் பொருள்களைத் தருக.

ஆ. இப்பாடலடி இடம்பெறும் பிரபந்தம் எது?

7. ‘‘வெங்கட் பிறைக்கும் கரும் பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே’’

அ. கரும்பு இறை என்று குறிப்பிடப்படுபவர் யார்?

ஆ. அப்பிறைக்கும் என்பதன் பொருளைத் தருக.

8. ‘‘அன்னதானத்துக்கு மார்தட்டிய துரை மால்சீதக்காதி
வரோதயனே’’

அ. சீதக்காதியின் கொடைப்பண்பாக வெளிப்படுவது எது?

ஆ. ‘வரோதயன்’ என்பதன் பொருள் யாது?

9. நான் தியானத்தில் இருந்த போது மிகவும் முக்கியமான ஒரு கேள்ளிக்கணையை வீசினாள்.

அ) கேள்விக்கணை என்பதில் வந்துள்ள அணி எது?

ஆ) இங்கு நான் என்று சுட்டப்படுபவர் யார்?

10. ‘‘பி.ஏ பரீட்சையில் யாழ்ப்பாணத்தவர்கள் இருவர் பரீட்சையை எடுத்து சித்தி எய்தியவர்கள்.’’

அ) பி.ஏ (BA) என்ற சுருக்கக்குறியீட்டினை தமிழில் எவ்வாறு அழைப்பர்.

ஆ) இங்கு இருவர் என்று குறிப்பிடப்படுபவர்களும் யாவர்?

**(10 xs 2 =** 20 புள்ளிகள்)

**02) பின்வரும் செய்யுட் பகுதிகளையும், உரைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்

கேண்மை தழீஇக் கொளல் வேண்டும் - யானை

அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்

மெய்யதா வால் குழைக்கும் நாய்

அ) நல்ல நண்பர்களுக்கு உவமையாக நாய் குறிப்பிடப்பட்டிருப்பதன் பொருத்தப்பாட்டை விளக்குக.

ஆ) யானை அனையவர் நட்பை நீக்க வேண்டுமென கவிஞர் கருதுவதற்கு காரணம் என்ன?

2. கழியும் பிழைபொருட் டள்ளிநன்னூலாங் கடலினுண்டு
   வழியும் பொதிகை வரையினில் கால்கொண்டு வண்கவிதை
   மொழியும் புலவர் மனத்தே யிடித்து முழங்கி மின்னிப்
   பொழியும் படிக்குக் கவிகாள மேகம் புறப்பட்டதே.

அ) கவியாற்றல் மிக்க புலவர்களுடைய பொது இயல்புகளாகக் குறிப்பிடப்படுபவை எவை?

ஆ) காளமேகப் புலவரின் கவியாற்றல் எவ்வாறு விளக்கப்படுகிறது.

3. முழங்குதிரைப் புனலருவி கழங்கெழுத் தாடும்
   முற்றமெங்கும் பரந்து பெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்.
   கிழங்கு கிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்
   கிம்புரியின் கொம்பெடுத்து வெப்புதினை யிடிப்போம்
   செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்.
   தேனலர் சண்பகவாசம் வானுலகில் வெடிக்கும்
   வழங்குகொடை மகராசர் குறும்பலவி னீசர்
   வளம்பெருகும் திரிகூட மலையெங்கள் மலையே!

அ) குற்றால மலையின் நீர்வளச் சிறப்பினைக் குறிப்பிடுக.

ஆ) இங்கு இடம் பெறும் பண்பாட்டு அம்சங்கள் எவை?

4. கைவேல் - எறிகிறவேல் - இறகுள்ள அம்பு - இல்லாத அம்பு - வான் - சக்கரம் இவற்றிற்கு மேலே தெய்வப் படைகளிலுங் கைவைக்கின்ற சமயம்; அந்தச் சமயம் பிறிற்றோ கட்சிக்குப் பேசவந்தவர்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உள்ள பிரபல வழக்கறிஞர்கள் வாதம் இல்லாத இடத்திலும் வாதம் வருவிக்கக் கூடியவர்கள்; நாவலர் அவர்களின் காசம் அவர்களுக்கு எதிர்பாராத அனுகூலம் அளித்தது. பிறிற்றோவை ஆகாசத்திலே தூக்கிக் கொண்டு போய் வைத்துவிட்டார்கள் அவர்கள். இராமநாதன் கட்சி சோர்ந்து போய்விட்டது.

அ) வாதம் உச்சக்கட்டம் அடைந்து விட்டதை ஆசிரியர் எவ்வாறு விபரிக்கின்றார்.

ஆ)பிறிற்றோவின் கட்சி வாதத்தில், மேலே செல்வதற்குச் சாதகமாக அமைந்த காரணங்கள் எவை?

5. அன்றிலிருந்து புகையிலைக்கன்றுக்கு பாத்தி கட்டுவது போல கணிப்பொறித் தளத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து ஒரு பகுதியில் நானும் இன்னொரு பகுதியில் மனைவியும் மீதியில் அரவிந்தனுமாகப் பயிர் செய்தோம். எங்கள் படைப்புக்களை இந்த வரம்புக்குள் வைத்துக் கொண்டோம். ஆரம்பத்தில் எனக்குக் கம்பியூட்டருடன் ஏற்பட்ட பிணக்கு நீங்கி ஓர்

இணக்கம் ஏற்பட்டது. அது தன்னிடமுள்ள சூட்சுமத்தை எல்லாம் மெல்ல மெல்ல அவிழ்த்து விடத் தொடங்கியது.

அ) கம்பியூட்டரை இலகுவாக பயன்படுத்துவதற்குக் கையாண்ட உத்தியாக ஆசிரியர் எதனைக் குறிப்பிடுகிறார்.

ஆ)''சூட்சுமத்தையெல்லாம் மெல்ல மெல்ல அவிழ்த்து விடத் தொடங்கியது'' என்பதனூடாக விளங்கிக் கொள்ளக் கூடியது யாது?

**(5 x 4 = 20 புள்ளிகள்)**

**03) நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு,**

அ. நாவலரின் கடமை உணர்வு

ஆ. கட்டுரையாசிரியரின் மொழிநடைச்சிறப்புகள்

வெளிப்படுமாற்றினை விளக்குக.

**அல்லது**

அ. திருக்குற்றாலக் குறவஞ்சி என்ற பாடத்தினை அடிப்படையாகக் கொண்டு

அ) குற்றால மலை வளம்

ஆ) இறைவனின் பெருமைகள்

வெளிப்படும் முறையினை எழுதுக.

**(15 புள்ளிகள்)**

04) 'கம்பியூட்டர்' என்ற சிறுகதையினை அடிப்படையாகக் கொண்டு

அ. அரவிந்தனின் தந்தை

ஆ. அரவிந்தன்

ஆகிய பாத்திரங்கள் கதையில் இழையோடப்பட்டிருக்கும் விதத்தினைத் தொகுத்து எழுதுக.

**அல்லது**

பாரதியார் சுயசரிதையை ஆதாரமாகக் கொண்டு,

அ. ஒருவர் தாம் விரும்பியவற்றை அடைய முடியாமல் போவதற்கான காரணங்கள்

ஆ. விரும்பியவற்றை அடைய முடியாதவர்களின் சாட்டுதல்கள்

இவற்றினைத் தொகுத்து எழுதுக.

**(15 புள்ளிகள்)**

- **5,6,7ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தொிவுசெய்து விடை எழுதுக.**

**05) வெளித்தோற்றத்தை வைத்து எவரையும் எடைபோடக் கூடாது** என்பதை **வெற்றிவேட்கை** எவ்விதம் வெளிப்படுத்தி நிற்கின்றது என்பதை விளக்குக.

06) காளமேகப் புலவரின் "ஆடிக் குடத்தடையும் …... என்ற செய்யுளை அடிப்படையாகக் கொண்டு பாம்புக்கும் எள்ளுக்கும் இடையிலான பொருத்தப்பாட்டினை விளக்குக.

07) "ஓர் தட்டிலே பொன்னும் ...... எனத் தொடங்கும் தனிப்பாடலில்

அ) பஞ்ச காலம்

ஆ) சீதக்காதியின் வள்ளண்மை

வெளிப்படுத்தப்படும் முறையினை விளக்குக.

(10புள்ளிகள்)